

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் நீலகிரி மாவட்ட தி.மு.க.விற்கான "அண்ணா அறிவாகம் எனும், WAR ROOMஐ கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா , தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் திறந்து வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், புதுப்பட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 13.09.2025 அன்று துவக்கி வைத்து, மருத்துவ பயனாளர்களுக்கு பதிவு அடையாள அட்டையினை வழங்கினார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜயகுமார், மாவட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் கண்காணிப்பு குழு உறுப்பினர் எம்.பரமசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், முருங்கத்தொழுவில் சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் அரசு செயலாளர் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை) வே.அமுதவள்ளி, இயக்குநர் (கைத்தறித்துறை) மகேஸ்வரி ரவிக்குமார், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, இணை இயக்குநர் (கைத்தறி) கணேசன் அவர்கள், உதவி இயக்குநர் (கைத்தறித்துறை) சரவணன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 36க்காக லீனா தொடக்கப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், மாண்புமிகு தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர், 14 தூய்மைப்பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகளை 23.09.2025 அன்று வழங்கினர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், நலவாரிய துணைதலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், உதகை நகரமன்ற தலைவர் திருமதி.வாணிஸ்வரி, நகர மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார் மற்றும் உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## திருச்சி அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில்

# அறிவு சார் சொத்துரிமை சார்ந்த தொழில் முனைவோர் மையம் துவக்க விழா!

### அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பங்கேற்பு!




திருச்சி, செப். 29 -

திருச்சியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், திருச்சி மண்டல அளவில் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் துவக்க விழா நடைபெற்றது.

இவ்விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன் பங்கேற்றனர்.

இதில், பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில் ...

மூன்றாவது மொழியை கற்று கொள்ள வேண்டும் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மீண்டும் கூறுகிறார்.

தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. தமிழ் எங்களது அடையாளம். ஆங்கிலம் எங்களுக்கான இணைப்பு மொழி. இரு மொழி கொள்கை மூலம் தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து விரிந்து பல்வேறு துறைகளில் சாதித்து வருகிறார்கள். இங்கு படித்தவர் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்ப துறையின் முதன்மை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அரசின் நிதியை முறையாக பயன்படுத்தி, தமிழ்நாடு திறன்வாய்ந்த மாநிலமாக இருக்க இரு மொழி கொள்கை தான் காரணம். அது ஒன்றிய அரசுக்கும் தெரியும். தெரிந்திருந்த போதும் வீண் வாதத்திற்காக நம் மீது ஏதாவது ஒன்றை திணிக்கிறார்கள்.

சென்னைக்கு அடுத்தபடியாக திருச்சியில் முதல்முறையாக எனது தொகுதியில் இந்த மையம் துவங்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

அனைவருக்கும் சமமான வாய்ப்புகளையும், அனைவருக்குமான வளர்ச்சியையும் ஏற்படுத்திக்கொடுக்கிறோம்.

படித்த மாணவர்கள் அறிவுசார் சொத்துரிமை மையத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன் பேசுகையில் ...

நான் மதுரையை சேர்ந்தவன். அதேசமயம் நான் திருச்சியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் பயின்றவன்.

அந்த நன்றி கடனுக்காக, சென்னைக்கு அடுத்தபடியாக மண்டல அளவிலான அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தை திருச்சியில் துவக்கிவைத்துள்ளேன். இதனை தொடர்ந்து மதுரையிலும் தொடங்க இருக்கிறோம் என்று பேசினார்.

அறிவுசார் சொத்துரிமை சார்ந்த தொழில்முனைவோர் (iTNT) மையத்தின் மூலமாக, தொழில்முனைவோர் ஊக்குவிப்பு, நிதி உதவி, கண்டுபடிப்பு, உற்பத்தி பொருட்கள் சந்தைப்படுத்தல், வணிகமயமாக்கல், பொருள்கள் வடிவமைப்பு, அறிவுசார் சொத்து பாதுகாப்பு, தொழில்நுட்ப பறிமாற்றம், கூட்டு உழைப்பு, இயக்கம், தயாரிப்பு யோசனை ஆகியவற்றை பெறமுடியும்.



திருவெறும்பூர் அருகே உள்ள வேங்கூர்ஊராட்யில்உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். முகாமிற்குதிருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தகுமார், அண்ணாதுரை ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ்.எம்.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்தமுகாமில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, உட்பட அரசு அதிகாரிகளும் பொதுமக்களும் அரசியல் கட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை!

# மயிலாடுதுறையில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோன்! ஓரணியின் தமிழ்நாடு தீர்மான பொதுகூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

மயிலாடுதுறை, செப். 25 –

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோன் என்ற தீர்மான ஏற்புக் பொதுக்கூட்டம் மயிலாடுதுறை சின்ன கடைத் தெருவில் நடைபெற்றது. பொது கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் குண்டாமணி (ஏ) என்.செல்வராஜ் வரவேற்றார். சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.என்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிறப்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கழக இளம் பேச்சாளர் அ.தீன்ஷாநூப் ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள். கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்களான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், பி.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், செல்ல சேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எம்.சம்சுதீன், எஸ்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், மாவட்ட அறங்காலர் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், பி.சிவதாஸ், ஹர்சத், அ.காந்தி, பி.கென்னடி, ஜெ.கபிலன், வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், சுபாநெடுஞ்செழியன், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, வி.எஸ்.என்.செந்தில், எஸ்.பாலாஜி, இரா.முருகன், ஆர்.சாந்தி, தீபாசத்தி யேந்திரன், பெரு.வீரமணி, இரா.செல்வராஜ், ஆர்.எஸ்.ஸ்ரீதர், டி.ராஜ்குமார், இரா.தனராஜ், இரா.மனோகரன், காழி.கலைவாணன், இரா.முருகப்பா, காளி.தேசப்பன், எம்.எஸ்.முத்துகுபேரன், வெடி எஸ்.பாலமுருகன், கே.விக்னேஷ், க.அறிவுச்செல்வன், வி.எஸ்.பிரபாகர், மா.வைத்தியநாதன், எஸ்.எம்.சம்சுதீன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.ஜுபையர்அகமது, ஜெ.கே.வினோத்பாண்டியன், எம்.எஸ்.சக்திவிஜய், எஸ்.ஆனந்தன், கோசி.மதி.திருமாவளவன், செள.சர்வோதயன், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர்கள் கே.மகேந்திரன், வி.ஜெயபிரகாஷ், க.சுரேஷ், தியாக.விஜயேஸ்வரன், பேரூராட்சி தலைவர்கள் கண்மணி அறிவழகன், பூங்கொடிஅலெக்சாண்டர், சுகுண சங்கரிகுமரவேல், சங்கிதாமாரியப்பன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் ஆர்.நடராஜன், எஸ்.எஸ்.குமார், மலைக்கோயில் எம்.பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், மேனகா.மாரியப்பன், எம்.குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதி நிதிகள், நகர்மன்ற மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், மகளிர் அணியினர், கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோன்! ஏன்ற உறுதி மொழி கூட்டத்திற்கு வருகை தந்த 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் ஏற்றுக் கொண்டனர்.



ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு கொட்டப்பட்டிருந்த குப்பைகளை அகற்றுவதற்கு தூய்மை பாரத திட்டம் 202425ன் கீழ் தாசேப்பள்ளி உரக்கிடங்கில் உள்ள 41400MT குப்பைகளை ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்தல் பணியினை மேயர் சத்யா , மாநகராட்சி ஆணையாளர் துவக்கி வைத்தனர். இப்பணி 9 மாத காலத்திற்குள் முடிவடைந்த பின்னர் இப்பகுதியில் மரங்கள் வைத்து பராமரிப்பு பணிகள் செய்யப்படும். விழாவின் போது துணை மேயர் ஆனந்தய்யா, பொது சுகாதாரக் குழு தலைவர் மாதேஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர நல அலுவலர், இளநிலை பொறியாளர் மற்றும் துப்புரவு அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், தமிழ்நாட்டில் இருந்து உலகத்தரமான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் நோக்கில் உழைத்திடும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆசிகளுடன், பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற கபடி போட்டியை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, கரூர் கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் பார்வையிட்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கினார்.



சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் தகரப்புதூர், மண் மலை ஆகிய ஊராட்சிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட தி.மு.க துணை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏவு.மான, கு. சின்னதுரை கலந்து கொண்டு பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆணையத்தை வழங்கினார். இதில் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.